Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 396 /2022

Deposition of witness for: PW - 8

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர். ஜான் சுந்தர் சிங் | Father/Husband Name | : சீனிவாசன் |
| Age | : | Calling | : |
| Date | : 18.03.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18day of 03.2026.

( சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை பிரிவில் உதவி அரசு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 28.10.2019 ம் தேதி அதிகாலை 12.05 மணிக்கு மேலூர் அரசு மருத்துவமனையில் உதவி அறுவை சிகிச்சை மருத்துவராக பணியில் இருந்தபோது கொட்டாம்பட்டி கிராமத்தை சேர்ந்த கண்ணன் என்பவர் சிகிச்சைக்கு 108 ஆம்புலன்ஸ்மூலம் அழைத்து வரப்பட்டார். அவர் மருத்துவமனைக்கு வந்த போது நல்ல சுயநினைவுடன்தான் இருந்தார். அவரை நான் விசாரித்தபோது தன்னை 27.10.2019 ம் தேதி தனது வீட்டருகே சுமார் இரவு 11.00 மணியளவில் தெரிந்த 3 நபர்கள் கட்டையால் தன்னை தாக்கியதாக சொன்னார். அவருக்கு 4 x 0.5 x0.5 செமீ தலையின் இடது புறத்தில் கிழிந்த காயம் இருந்தது. அவரை உள்நோயாளியாக 28.10.2019 யிலிருந்து 03.11.2019 ம்தேதி வரை சிகிச்சை அளித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று காயச்சான்ற வழங்கினேன். **(அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றுதழ் அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ). போலீசார் என்னை

விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர்**

**எதிரிகள்தரப்பில்குறுக்குவிசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள அசாஆ 6 என்னால் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அசாஆ 6 ல் கண்ணனை யார் அழைத்து வந்தார் என்று பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான், 108 ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துவரப்பட்டார். கண்ணன் மேலூர் மருத்துவமனைக்கு அழைத்து வருவதற்கு முன்னர் வேறு எந்த மருத்துவமனையிலாவது முதல் உதவி பெற்றதாக அசாஆ 6 ல் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதேபோல் நன்கு தெரிந்த 3 நபர்கள் அவர் வீட்டருகே தாக்கியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். தன்னை எந்த விதமான ஆயுதத்தை வைத்து தாக்கியதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, கட்டையை வைத்து தாக்கியதாக கூறியுள்ளார். கண்ணன் தனது உடம்பில் வேறு பகுதிகளில் காயம் இருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதேபோல் நடந்ததாக சொல்லப்படும் சம்பவமானது அசாஆ 6 ல் இரவு 11.00 மணியளவில் நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசாஆ 6 ல் காயத்தின் நிறம், காலம் குறித்து நான் குறிப்பு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். ஒரு நபர் மதுபோதையில் கரடு, முரடான பகுதியில் தடுமாறி விழுந்தால் கூட இதுபோன்ற காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.